# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண்.208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 600 106
தொலைபேசி எண் : 2363 5010, 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் – tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு எண் 07/2020 நாள் 11.01.2020

நடைபெற்ற ஊரக உள்ளாட்சி தேர்தல்களில், 11.01.2020 அன்று மாவட்ட ஊராட்சித் தலைவர், மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர், ஊராட்சி ஒன்றிய தலைவர், ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர், கிராம ஊராட்சி துணைத் தலைவர் ஆகிய பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் நடைபெற்றது.

மாவட்ட ஊராட்சித் தலைவருக்கு மொத்தம் உள்ள 27 பதவியிடங்களில் 26 பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட ஊராட்சியில் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகையின்மையால் (Quorum), மறைமுகத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

இதில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 13 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 12 இடங்களிலும், பாட்டாளி மக்கள் கட்சி ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

மாவட்ட ஊராட்சித் துணைத் தலைவர் பதவியிடங்களில், மொத்தம் உள்ள 27 பதவியிடங்களில் 26 பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல் நடைபெற்றது. சிவகங்கை மாவட்ட ஊராட்சியில் போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகையின்மையால் (Quorum), மறைமுகத் தேர்தல் ஒத்தி வைக்கப்பட்டது.

இதில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 7 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 11 இடங்களிலும், பாட்டாளி மக்கள் கட்சி 3 இடங்களிலும், பாரதீய ஜனதா கட்சி 2 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் 2 இடங்களிலும், தேசிய முற்போக்கு திராவிட கழகம் ஒரு இடத்திலும் வெற்றி பெற்றுள்ளன.

..2..

ஊராட்சி ஒன்றியங்களில், சட்டம், ஒழுங்கு பிரச்னை காரணமாக 12 இடங்களிலும், போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகையின்மையால் (Quorum), 13 இடங்களிலும், தேர்தல் நடத்தும் அலுவலரின் உடல்நலக்குறைவு காரணமாக 2 இடங்களிலும் என மொத்தம் 27 ஊராட்சி ஒன்றியங்களில், ஊராட்சி ஒன்றிய தலைவருக்கான மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை.

ஊராட்சி ஒன்றியத் தலைவர் பதவியிடத்திற்கான மறைமுகத் தேர்தல் நடைபெற்ற 287 ஊராட்சி ஒன்றியங்களில், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 140 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 125 இடங்களிலும், பாட்டாளி மக்கள் கட்சி 7 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 5 இடங்களிலும், பாரதீய ஜனதா கட்சி 3 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களிலும், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் 2 இடங்களிலும், சுயேட்சைகள் 2 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் பதவியிடத்திற்காக மொத்தம் உள்ள 314 பதவியிடங்களில் 41 பதவியிடங்களுக்கு போதிய எண்ணிக்கையில் உறுப்பினர்கள் வருகையின்மையால் (Quorum), மறைமுகத் தேர்தல் நடைபெறவில்லை. மீதமுள்ள 273 பதவியிடங்களுக்கு நடைபெற்ற மறைமுகத் தேர்தலில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 94 இடங்களிலும், திராவிட முன்னேற்றக் கழகம் 107 இடங்களிலும், பாட்டாளி மக்கள் கட்சி 19 இடங்களிலும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி 8 இடங்களிலும், தேசிய முற்போக்கு திராவிட கழகம் 7 இடங்களிலும், அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம் 5 இடங்களிலும், பாரதீய ஜனதா கட்சி 4 இடங்களிலும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களிலும், சோசியல் டெமாகரட்டிக் பார்ட்டி ஆ∴ப் இந்தியா ஒரு இடத்திலும், சுயேட்சைகள் 25 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளனர்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

11/1/2020

மக்கள் தொடர்பு அலுவலர்